**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்**

முன்னிலை: திரு.ஜெ.செல்வன் ஜேசு ராஜா, எம்.ஏ., எல்.எல்.எம்.,

மாவட்ட உரிமையியல் நீதிபதி, மேட்டூர்

2019 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 5 ஆம் நாள் சனிக்கிழமை

இ.ம.எண்: 732/2018

in

அ. வ. எண் : 395/2012

பழனியப்பன் . . . . மனுதாரர்/ வாதி

/எதிராக/

1.வையாபுரி
2.பெரமகவுண்டர்
3.மயிலி(எ)மயில்
4.அம்மாசி(died)
5.சின்னபொன்னு
6.துரைசாமி
7.சின்னதம்பி
8.மகாலிங்கம் . . . . .எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு கடந்த 02.01.2019-ம் தேதியன்று இந்நீதிமன்றம் முன்பாக இறுதியான விசாரணைக்கு வரப்பட்டு மனுதாரர்/வாதி தரப்பில் திரு.B.பாலமுருகன், வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 3ம் எதிர்மனுதாரர்கள்/ 1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் திரு.R.குருசாமி மற்றும் திரு.N.சசிக்குமார், வழக்கறிஞர்கள் ஆஜராகியும் மற்றும் 4ம் எதிர்மனுதாரர்/4ம் பிரதிவாதி இறந்துவிட்ட சூழ்நிலையிலும், பின்னிட்டு 5, 6ம் எதிர்மனுதாரர்கள்/5, 6 பிரதிவாதிகள் தோன்றாதரப்பினராகியும், 7, 8 எதிர்மனுதாரர்கள்/7, 8 பிரதிவாதிகள் தரப்பில் திரு.S.ஈஸ்வரன், வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும் இருந்து வந்த இம்மனுவில் இருதரப்பு வாதுரைகள் கேட்கப்பட்டும், வழக்கு கோப்புகளை பரிசீலனை செய்தும் இதுநாள் வரை எமது ஆய்வில் இருந்து வந்த மேற்படி மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்,

உத்தரவு

இந்த மனுவானது உரிமையியல் நடைமுறைச்சட்டம் வகுமுறை 6 விதி 17 மற்றும் பிரிவு 151சி.பி.சி-ன் கீழ் மேற்படி அசல் தாவாவில் இம்மனுவின் கீழ் கண்டுள்ளபடிக்கு திருத்தம் செய்திட உத்தரவு செய்ய வேண்டி மனுதாரர்/வாதியால் தாக்கல் செய்யப்பட்ட இடைக்கால மனு இதுவாகும்.

1) <u>மனுதாரர்/வாதி தாக்கல் செய்த மனுவின் சுருக்கம்</u> : -

இந்த மனுவில் மனுதாரர் அசல் வழக்கில் வாதியாவார். மனுதாரர் /வாதி விளம்புகை பரிகாரம் மற்றும் பாகப்பிரிவினை பரிகாரம் மற்றும் இதர பரிகாரங்களுக்காக இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளார். இந்த வழக்கில் 4 ம் பிரதிவாதி அம்மாசி என்பவர் இறந்தபிறகு, அவரது வாரிசுகளை கட்சி சேர்ப்பதற்காக மனுதாரர் /வாதி தரப்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டு, அது அனுமதிக்கப்பட்டுள்ளது. பின்னிட்டு அதனடிப்படையில் தாவாவை திருத்தம் செய்ய வேண்டி இ.ம.எண்.499/2015 என்ற திருத்தப்பாடு மனுவை மனுதாரர் /வாதி தாக்கல் செய்து, அதுவும் 04.10.2016 ல் அனுமதிக்கப்பட்டுவிட்டது. அந்த திருத்தப்பாடு மனுவில் 4 ம் பிரதிவாதி இறந்துவிட்டார் என்ற சங்கதியை திருத்தப்பாடு விவரத்தில் கவனக்குறைவாக தெரிவிக்கப்படாமல் விடுப்பட்டுவிட்டது. 4 ம் பிரதிவாதியின் பெயருக்கு அருகில் இறந்தவர் என்று திருத்தப்படாமல் தவறிவிட்டதால், அதுசம்பந்தமாக சரி செய்ய இந்த திருத்தப்பாடு மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி தவறை திருத்தம் செய்யாவிட்டால் எதிர்காலத்தில் வீணான குழப்பம் ஏற்படும். இம்மனுவில் கோரப்படும் திருத்தப்பாடுகள் மனுதாரரின் வேண்டுமென்றே தவறினால் ஏற்படவில்லை, மாறாக கவனக்குறைவினால் ஏற்பட்டது. இம்மனுவை ஏற்பதால் எதிர்தரப்பினருக்கு எவ்வித இழப்பும் ஏற்படுவதில்லை. மேலும் உத்தேச திருத்தப்பாடுகள் வழக்கின் தன்மையை எவ்விதத்திலும் மாற்றம் செய்யாது. ஏற்கனவே கூறப்பட்டுள்ள வழக்குமூலம் அல்லது வழக்கின் தன்மை எந்தவிதத்திலும் மாற்றம் அடையாது. எனவே இந்த மனு அனுமதிக்கப்படவேண்டும்.

2) <u>1 ம் எதிர்மனுதாரர் / 1 ம் பிரதிவாதி தாக்கல் செய்து 2, 3 எதிர்மனுதாரர்கள்/2, 3 பிரதிவாதிகளால் ஏற்றுக் கொள்ளப்பட்ட எதிருரையின் சுருக்கம்</u> : -(இந்த எதிருரையை 7, 8 எதிர்மனுதாரர்கள்/7, 8 பிரதிவாதிகள் ஏற்றுக் கொள்வதாக குறிப்பாணை தாக்கல் செய்யப்பட்டுள்ளது)

இந்த மனு பொய்யானதும், மோசடியானதும், சட்டவலிவற்றதும், இந்த எதிர்மனுதாரரை ஏமாற்றும் நோக்குடன் மனுதாரரால் பொய்யான சங்கதிகளைப் புனைந்து தாக்கல் செய்யப்பட்ட ஒன்றும் ஆகும். இவ்வழக்கின் 4 ம் பிரதிவாதி அம்மாசி என்பவர் வழக்கு தாக்கல் செய்யப்படுவதற்கு முன்பாகவே 14.10.2012 ம் தேதியில் இறந்துவிட்டார். இவ்வழக்கு சமூகம் நீதிமன்றத்தில் 23.11.2012 ம் தேதியில்தான் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அவ்வாறிருக்கையில் வழக்கு தாக்கல் செய்யப்படுவதற்கு முன்பாகவே இறந்துவிட்ட 4 ம் பிரதிவாதியினை வழக்கு நிலுவையில் இருக்கும்போது இறந்ததாக பொய்யாக இட்டுக்கட்டி கூறி ஏற்கனவே பொய் விவரங்களை கூறி

தாவாவில் திருத்தப்பாடுகளை மனுதாரர் மேற்கொண்டுள்ளார். தற்போது மீண்டும் தாவாவில் திருத்தம் செய்ய வேண்டுமென்று கூறி இம்மனுவை தாக்கல் செய்துள்ளார். இதுவரை பலமுறை மனுதாரர் /வாதி மீண்டும் மீண்டும் வழக்கினை திருத்தம் செய்ய வேண்டுமென கோரி பல்வேறு மனுக்கள் தாக்கல் செய்துள்ளார். தொடர்ந்து இவ்வழக்கினை இழுத்தடிப்பு செய்ய வேண்டுமென்ற நோக்குடன் மனுதாரர் இவ்வாறு அடுத்தடுத்து வெவ்வேறு மனுக்களை தாக்கல் செய்து வருகிறார். ஏற்கனவே இவ்வழக்கு தாக்கல் செய்யும் முன்பாகவே 4ம் பிரதிவாதி அம்மாசி என்பவர் 14.10.2012ம் தேதியில் இறந்துவிட்ட பிறகு அவர் உயிரோடு இருப்பதாக காட்டி 23.11.2012ம் தேதியில் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் இறந்துபோன நபருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள காரணத்தால் (Suit against dead person) இவ்வழக்கே நிலைக்கத்தக்கதல்ல. இப்படிப்பட்ட சூழ்நிலையில் மீண்டும், மீண்டும் திருத்தங்கள் கோரி இவ்வெதிர்மனுதாரருக்கு தொல்லை தரும் நோக்குடன் மனுதாரர் /வாதி மனுக்கள் தாக்கல் செய்து வருவது ஏற்புடையது அல்ல, அதனாலும் இம்மனு சட்டப்படி ஏற்கத்தக்கதல்ல. மேலும் இம்மனு மட்டுமல்லாமல் இவ்வழக்கும் சட்டப்படி ஏற்கத்தக்கதல்ல. இம்மனு சட்டப்படியும், நியாயப்படியும் அனுமதிக்கத்தக்கதல்ல. இம்மனுவினை அனுமதிக்க எவ்விதமான நியாயமான காரணமும் கிடையாது. ஆகையால் சமூகம் கோர்ட்டாரவர்கள் தயவு செய்து மேற்படி மனுவினை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டுமாய் இந்த எதிர்மனுதாரர் சமூகம் கோர்ட்டாரவர்களை வணக்கமாய் பிரார்த்திக்கிறார்.

3) இருதரப்பு கற்றறிந்த வழக்குரைஞர்களின் மதிப்பிற்குரிய வாதங்கள் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. இம்மனு விசாரணையின் போது மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் வாய்மொழி சாட்சியங்களோ, ஆவண சாட்சியங்களோ எதுவும் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

4) <u>பிரச்சனை :-</u>

மேற்படி அசல் தாவாவில் இம்மனுவின் கீழ் கண்டுள்ளபடிக்கு திருத்தம் செய்ய அனுமதிக்க வேண்டுமா? என்பதே நாம் முடிவு செய்ய வேண்டிய பிரச்சினையாகும்.

5) அசல் வழக்கானது மனுதாரர்/வாதியால் விளம்புகை பரிகாரம், நிரந்தர தடையுறுத்துக்கட்டளை பரிகாரம் மற்றும் பாகப்பிரிவினை பரிகாரத்திற்காக எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டு, விசாரணைக்கு சிறப்பு பட்டியலில் போடப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது. இந்த சூழ்நிலையில் 14.10.2012ல் இறந்து போன 4ம் பிரதிவாதியின் வாரிசுகளை ஏற்கனவே கட்சி சேர்த்த

பிறகும், 4ம் பிரதிவாதியின் பெயருக்கு அருகில் இறந்தவர் என வழக்குரையில் திருத்தம் செய்ய அனுமதி கோரி மனுதாரர் /வாதி தரப்பில் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது. வழக்கு தாக்கல் செய்யப்பட்ட ஆரம்ப காலக்கட்டத்திலேயே 4ம் பிரதிவாதி அம்மாசி இறந்து போய்விட்டதாக நீதிமன்ற சம்மன் கிடைக்கப் பெற்றதன் அடிப்படையில் இறந்துபோன 4ம் பிரதிவாதியின் வாரிசுகளை கட்சி சேர்க்க வாய்தா போடப்பட்டு, மனுதாரர் /வாதி தரப்பில் முறையான நடவடிக்கை எடுக்க தவறிவிட்டதால், 4ம் பிரதிவாதிக்கு எதிராக வழக்கு abate ஆகிவிட்டதாக 12.07.2013ல் தள்ளுபடி செய்யப்பட்டு உத்தரவு பிறப்பிக்கப்பட்டு, இதர பிரதிவாதிகளுக்கு எதிராக மட்டும் வழக்கு நடவடிக்கைகள் தொடரப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது. பின்னிட்டு இறந்துபோன 4ம் பிரதிவாதிக்கு எதிரான abatement-ஐ இரத்து செய்ய கோரியும், 4ம் பிரதிவாதியின் வாரிசுகளை கட்சி சேர்க்க கோரியும், காலதாமதத்தை மன்னிக்க கோரியும் மனுதாரர் /வாதி தரப்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டு, இ.ம.எண்.497/2015, 498/2015, 499/2015 ஆகிய மனுக்கள் 04.10.2016ல் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது. மேற்படி மனுக்களில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் அடிப்படையில் இறந்து போன 4ம் பிரதிவாதியின் வாரிசுகள் 6 முதல் 8 பிரதிவாதிகளாக அசல் வழக்கில் கட்சி சேர்க்கப்பட்டு, அதுசம்பந்தமாக வழக்குரையை திருத்தம் செய்வதற்காக இ.ம.எண்.877/2016 என்ற மனு தாக்கல் செய்யப்பட்டு, 13.03.2017ல் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது. மேற்படி இ.ம.எண்.877/2016 என்ற திருத்தப்பாடு மனுவிலேயே 4ம் பிரதிவாதியின் பெயருக்கு அருகில் இறந்தவர் என காண்பிப்பதற்கான உத்தேச திருத்தப்பாட்டை மனுதாரர் /வாதி தரப்பில் முறையாக தெரிவிக்க தவறிவிட்டதால், அந்த தவறை திருத்தம் செய்வதற்கு இந்த திருத்தப்பாடு மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது. எனவே இந்த மனுவானது மிகவும் சாதாரணமான எளிமையாக கையாளக்கூடியதாக இந்நீதிமன்றம் காண்கிறது. ஆனால் இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே 14.10.2012ல் இறந்துபோன 4ம் பிரதிவாதியை சேர்த்து 23.11.2012ல் வழக்கு தாக்கல் செய்துவிட்டு, வழக்கு நிலுவையில் உள்ள போது 4ம் பிரதிவாதி இறந்ததாக மனுதாரர் பொய்யாக கூறியுள்ளதாக 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள் தரப்பில் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. .இதே குற்றச்சாட்டைத்தான் முன் வைத்து, இ.ம.எண்.877/2016 லும், எதிர்மனுதாரர்கள் ஆட்சேபனை செய்துள்ளதாகவும், அதற்கு முறையான விளக்கமளித்து இந்நீதிமன்றத்தால் அந்த மனு அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிய வருகிறது. இறந்துபோன நபருக்கு எதிராக பிறப்பிக்கப்படும் உத்தரவுகள்தான் செல்லத்தக்கதல்ல எனவும், ஏற்கனவே இறந்துபோன நபரின் வாரிசுகள் சம்பந்தமாக பாகப்பிரிவினை

வழக்கில் நடவடிக்கை எடுப்பதற்கு எந்த தடையும் இல்லையெனவும் இந்நீதிமன்றம் தெளிவுபடுத்துகிறது. 14.10.2012 தேதியில் 4 ம் பிரதிவாதி இறந்துவிட்டதை ஒப்புக் கொண்டுதான் மனுதாரர்/வாதி தரப்பில் ஏற்கனவே அசல் வழக்கில் திருத்தம் செய்து, பாரா.6 ஏ கூடுதலாக சேர்க்கப்பட்டுள்ளதாக இந்நீதிமன்றம் காண்கிறது. இந்த வழக்கானது பாகப்பிரிவினைக்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் வழக்கிற்கு முன்பே 4ம் பிரதிவாதி இறந்திருந்தாலும் அவரது இறப்பு சம்மந்தமாக வழக்கு தாக்கல் செய்த பிறகு தெரியவரும் பட்சத்தில் 4ம் பிரதிவாதியின் வாரிசுகளை தரப்பினர்களாக சேர்க்க வேண்டியது அவசியமானது என இந்நீதிமன்றம் தெளிவுப்படுத்துகிறது. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே 4ம் பிரதிவாதி இறந்திருந்தாலும், அது சம்மந்தமாக பாகப்பிரிவினை வழக்கில் நடவடிக்கை எடுப்பதை ஆட்சேபனை செய்ய இயலாது எனவும், மேற்படி நடவடிக்கை எடுத்திருப்பதில் எந்த தவறும் இல்லை எனவும், இந்நீதிமன்றம் காண்கிறது. அதனடிப்படையில் 4 ம் பிரதிவாதியின் பெயருக்கு அருகில் இறந்தவர் என சேர்த்து தாவாவை திருத்தம் செய்வது சம்பந்தமாக தாக்கல் செய்துள்ள இம்மனு consequential மனு எனவும், இந்த மனுவை ஏற்பதால் எதிர்தரப்பினருக்கு எந்தவிதமான இழப்பும் ஏற்படப்போவதில்லை எனவும், மாறாக இம்மனு ஏற்கப்படாவிடில் மனுதாரருக்கு பெருத்த கஷ்ட நஷ்டங்கள் ஏற்படுவதுடன் இந்த வழக்கில் முழுமையான தீர்வை எட்ட இயலாமல் போய்விடும் எனவும், உத்தேச திருத்தப்பாடுகள் வழக்கின் தன்மையை எந்தவிதத்திலும் மாற்றம் செய்யாது எனவும், ஏற்கனவே கூறப்பட்டுள்ள வழக்குமூலம் அல்லது வழக்கின் தன்மை எந்தவிதத்திலும் மாற்றம் அடைவதில்லை எனவும், ஒரு முழுமையான தீர்வை அடைய இந்த consequential மனுவை ஏற்கவேண்டியது அவசியமாயும், நியாயமாயும் உள்ளது எனவும், இந்நீதிமன்றம் காண்கிறது. அதேசமயம் மனுதாரர் /வாதியின் கவனகுறைவின் காரணமாகவும், காலதாமதத்தின் காரணமாகவும் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு ஏற்பட்டுள்ள கஷ்ட நஷ்டம் சம்பந்தமாக செலவுத் தொகை கொடுக்கக் கடமைப்பட்டுள்ளார் எனவும் இந்நீதிமன்றம் தெளிவுபடுத்துகிறது. எனவே மனுதாரர் / வாதிக்கு ஒரு வாய்ப்பு வழங்குவதற்காக அசல் வழக்கினை திருத்தம் செய்ய அனுமதியளித்து இந்த மனுவை செலவுத் தொகையுடன் அனுமதிக்கலாம் என இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

*இறுதியாக, இந்த மனு அனுமதிக்கப்பட்டு, செலவுத் தொகையாக ரூ.500/-ஐ மனுதாரர்/வாதி 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள்/1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு 11.01.2019 ம் தேதிக்குள் கொடுக்கவேண்டும் எனவும், தவறும்பட்சத்தில் இந்த மனு*

*தள்ளுபடி செய்யப்படும் எனவும் உத்தரவிடப்படுகிறது. வாய்தா 11.01.2019.*

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்படடு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2019 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 5 ஆம் நாள் இந்த திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

ஒப்பம்/-ஜெ.செல்வன் ஜேசுராஜா,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.

<u>மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பு</u>
<u>சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள்</u> : இல்லை

ஒப்பம்/-ஜெ.செல்வன் ஜேசுராஜா,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்